669PLT

சிவமயம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

அச்சுவேலி

உயர்திரு. முத்துச்சாமி தங்கராசா

(மறைவு : 17 – 05– 1997)

அவர்களதும்

மூத்த மருமகள்

திருமதி கவீந்திரதாஸ் மாலினி

(மறைவு : 21–05–1997)

அவர்களினதும்

நினைவு குறித்த

வெளியீடு

உ

சிவமயம்

அச்சுவேலி

உயர்திரு. முத்துச்சாமி தங்கராசா

(மறைவு : 17 – 05– 1997)

அவர்களதும்

மூத்த மருமகள்

திருமதி கவீந்திரதாஸ் மாலினி

(மறைவு : 21–05–1997)

அவர்களினதும்

நினைவு குறித்த

வெளியீடு

சிவமயம்

திரு. முத்துச்சாமி தங்கராசா அவர்கள்

தோற்றம் :
20 – 04 – 1917

மறைவு :
17 – 05 – 1997

திதி வெண்பா

ஆண்டு ஈசுரவும் வைகாசியாம் நற்றிங்கள்தனில்
பூண்டதிதி பூர்வபக்கத்தேகாதசியில் — நீண்டபுகழ்
தங்கராசா எனும் தண்ணளி மிக்குடையான்
கங்கை முடி சூடிபதம் சார்ந்தனனே.

உ

சிவமயம்

திருமதி மாலினி கவீந்திரதாஸ் அவர்கள்

669 PLT

தோற்றம் :	மறைவு :
06 – 02 – 1951	21 – 05 – 1997

திதி : (வைகாசி விசாகம்) பூரணை

ஈசுர வருடம் வைகாசி மாதம் 7 ஆம் நாள்
புதன்கிழமை

சிவமயம்

திரு. முத்துச்சாமி தங்கராசா அவர்களின் வாழ்க்கை வரலாறு

அறிஞர்கள் மிகுந்து வாழும் அழகுசால் கிராமம் அச்சுவேலியாகும். இது யாழ் குடாநாட்டினுள்ள ஓர் அழகிய கிராமம் ஆங்குள மக்களைப் பாதுகாக்கும் தெய்வமாய்க் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார் உலவிற்குளம் அத்திமுகத்துச் சித்தி விநாயகப்பெருமான். இப்பரம்பொருளின் நல்லருளாலே ஆங்கே பெருஞ்சீர்சிறப்புடன் வாழ்ந்த உயர் சைவவேளாண் குலதிலகராம் திரு. சுவாமிநாதர் முத்துச்சாமி எனும் உத்தமசீலரும் அவர்தம் இல்வாழ்க்கைத் தர்மபத்தினியாம் சின்னத்தங்கம் எனும் சிற்றிடையாளும் ஆற்றிய பெருந்தவத்தினால் அன்னவருக்கு நற்புத்திரனாகத் தோற்றினார் எங்கள் தங்கராசா எனும் சற்குணசீலன். இத்தோற்றம் நிகழ்ந்தது 1917ம் ஆண்டு வைகாசித் திங்கள் 12ம் நாளில் என்க.

இவர் தந்தையா அன்னராசா கனகரத்தினம் ஆகிய மூவரையும் அன்புச்சோதரராகவும், நாகம்மா, சிவபாக்கியம் ஆகிய இருவரையும் அருமைச் சோதரிகளாகவும் அடையப்பெற்று அன்னவர் மீது அளவிறந்த பாசமும் நேசமும் உடையவராய் அகம் மகிழ்ந்திருந்தார்.

இவர் ஆரம்பத்தில் அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்தின் முகாமையாளராகவும், ஐக்கிய நாணயசங்கத்தின் முக்கிய உறுப்பினராகவும் இருந்து அருஞ்சேவைபுரிந்தார். பின்னர் "ராஜ் அலங்கார மாளிகை" என்னும் நாமம் தாங்கிய வியாபார ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பித்து அதன் உரிமையாளராக நெடுங்காலம் இருந்தார்.

இவர் காளைப்பருவத்தை அடைந்து விளங்கிய காலையில் இவரின் பெற்றார் இவரை மணவாழ்வில் புகுத்தி மகிழப் பெரிதும் அவாவினர். அக்காலத்தில் கோப்பாய்த் திருப்பதியில் பெரும் மதிப்புடன் வாழ்ந்த திரு. அப்பாக்குட்டி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி கற்பிலும், பொற்பிலும் மிக்க இராசம்மா எனும் இளநங்கையை இவருக்கு மாண்புமிக்க மனையாளாக்கி மகிழ்ந்

தனர் பெரிதும். இவ்விளந் தம்பதியர் இருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், அமிழ்தும் சுவையும் போலவும், இணைபிரியாது ஒத்த அன்பும் ஒத்த பண்பும் ஒத்த செயலும் உடையோராய் வாழ்வாராயினர். இவர்கள் இவ்வாறு இல்லறப் பூங்காவில் இனிதே உலாவரும் நாளில்.

"மங்கலம் என்பமனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட்பேறு"

என்று வள்ளுவன் தந்த இலக்கியத்திற்கு ஓர் இலக்கணம் படைப்பாராயினர் தமது மாட்சிமை மிக்க மனைவாழ்வின் அணிகலன்களாக கவீந்திரதாஸ், இரவீந்திரதாஸ், தவீந்திரதாஸ் எனும் தாஸர்கள் மூவரைப் புத்திரர்களாகப்பயந்து இறும்பூதெய்தினர். இச்செல்வப் புதல்வர்களின் எதிர்கால வளமான வாழ்வுக்கு வேண்டியவற்றை எல்லாம் குறைவறப்புரிந்தனர். இவர்கள் பராயமுற்று விளங்கிய காலையில் இவர்களைத் திருமணக்கோலத்தில் கண்குளிரப் பார்த்து மகிழ அவாவினர் பெரிதும்.

சிரேஷ்ட புத்திரனும், வலிகிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கத்தின் செயலாளராக அரும்பணியாற்றி அண்மையில் அச்சங்கத்தின் பொதுமுகாமையாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ள கவீந்திரதாஸ் எனும் நற்குணசீலனுக்கு ஏற்றாலைத் திருப்பதியில் ஈடு இணையற்று வாழ்ந்த திரு. பொன்னம்பலம் தம்பதிகளின் அருமைப் புதல்வியாம் திருவளர் செல்வி மாலினி என்னும் மங்கையர்க்கரசியை மனதிற்குகந்த இல்லத்தரசியாக்கி மகிழ்ந்திருந்தனர். இவ்விளந்தம்பதியர் இருவரும் ஆற்றிய பெருந்தவப்பயனால் பிரேமிளா, திருமகள் எனச்செல்வப் புதல்விகள் இருவர் கிடைக்கப்பெற்றுப் பேருவகை பூத்தனர்.

இரண்டாவது புதல்வனும், யாழ் கல்வித் திணைக்களத்தில் கட்டிடத் தொழில்நுட்பவியலாளராய் அருஞ்சேவை ஆற்றுபவரும் ஆகிய இரவீந்திரதாஸ் என்னும் இளஞ்செம்மலுக்கு நெல்லியடிப்பதியில் அதிசிறப்புடன் வாழ்ந்த திரு. கந்தசாமி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி கமலநாயகி எனும் மங்கை நல்லாளை வாழ்க்கைத்துணைவி ஆக்கி ஆனந்தம் அடைந்தனர். இத்தம்பதியர் இருவரும் பெருநோன்பு இயற்றி கணிதா சங்கீதா எனும் அன்புப் புதல்வியர் இருவர் கிடைக்கப்பெற்று அளவிலா ஆனந்தம் அடைந்தனர்.

கனிஷ்ட புத்திரனும், காவல்துறையில் பொலிஸ் சார்ஜண்ட் ஆகப் பெரும்பணிபுரிந்தவரும் ஆகிய தவீந்திரதாஸ் எனும் தண்ணளியானுக்கு. பெருஞ்சிறப்புடன் வாழ்ந்த திரு. சின்னையா தம்பதிகளின் அருமைப்புதல்லி பத்மாவதி எனும் பாவை நல்லாளை இல்லாள் ஆக்கி இருந்தனர் மகிழ்ந்தே. இத்தம்பதியர் இருவரும் ஆற்றிய பெருநோன்பின் பயனால் கலைச்செல்வி, கிரிவாணி, கிரிசாந்தன் எனும் பிள்ளைகள் மூவர் கிடைக்கப்பெற்று உளம் பூரித்தனர்.

இவர் இவ்வாறு பெருஞ்சுற்றம் சூழவாழ்ந்து வரும்நாளில் திடீரென்று நோய்வாய்ப்பட்டு 1997ம் ஆண்டு வைகாசித்திங்கள் 17ம் நாளில், இவர்மூன் அன்புடன் தொண்டாற்றி வழிபட்டு வந்த சித்திவிநாயகரின் உச்சிக்கால ஆராதனை வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தத் தெய்வீக வேளையிலே இம் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினர்,

ஓம் சாந்தி.



திருமதி மாலினி கவீந்திரதாஸ்

இவர் ஏழாலை மேற்கில் திரு. முத்தர் பொன்னம்பலம் (அப்போதிக்கரி) திருமதி தங்கம் பொன்னம்பலம் தம்பதியினருக்கு இளையமகளாக 6-2-1957 ல் பிறந்தார். பிறந்த முதல் வாரத்திலேயே தாயை இழந்தார். பெரியதாய் திருமதி சின்னம்மா, பெரியதந்தை ஐ. பேரம்பலம் தம்பதியினர் இவரை அன்றே தத்தெடுத்துத் தமது மகளாக்கிக் கொண்டனர். பேபி என்ற செல்லப்பெயருடன் அண்ணன்மார், உமாகாந்தன், இலட்சுமிகாந்தன், மகாதேவன், பத்மநாதன், பாலசுப்பிரமணியம், சிவலிங்கம், கனகசபாபதி என எண்மரதும், அக்காமார் சந்திரவதனி, சத்தியபாமா, புஸ்பராணி, இந்திராணி, பத்மாசனி, சாரதாதேவி, இராஜராசேஸ்வரி, புனிதவதி என எண்மரதும் அரவணைப்பில் சீரும் சிறப்பும் ஓங்க வளர்ந்து வந்தார். தனது ஆரம்பகல்வியை ஏழாலை சைவசன்மார்கக வித்தியாசாலையிலும், இடைநிலை மேல்நிலை கல்வியை மல்லாகம், இந்துக்கல்லூரி இராமநாதன் கல்லூரியிலும் தொடர்ந்தார். மணப்பருவம் அடைந்தவேளை அச்சுவேலி வாழ் தங்கராசா கவீந்திரதாஸ் அவர்களை 1980ம் ஆண்டு உற்றார், உறவினர் வாழ்த்த திருமணம் செய்துகொண்டும். இல்வாழ்வின் பயனாய் பிரமிளா, திருமகள் என இரண்டு பெண்பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இல்வாழ்க்கை இனிதே நடைபெற்றது. இருந்தும் 1995ம் ஆண்டு ஆடிமாதம் குண்டு ஒன்று வெடித்ததில் மாலினி, கணவர், இளைய மகள் திருமகள் மூவரும் படுகாயமுற்றனர். திருவருட் துணையால் மூவரும் தேறினர். காலம் ஓடியது. மக்கள் இடம்பெயர்ந்தனர் இவர்களும் வடமராட்ச்சிக்கு இடம்பெயர்ந்தனர்.

மீண்டும் வாழ்ந்த இடம் வந்துசேர்ந்தனர். மூத்தமகள் O/L சோதனையில் சித்தியடைந்தார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வமும் வளர்ந்தது பிள்ளைகளின் கல்வி அறிவை வளர்க்க ஆர்வமுடன் செயற்பட்டார்.

இடையில் 17-5-97ல் ஒரு செய்தி.மாமனார் திரு. தங்கராசா அவர்களின் மரணச்செய்தி அது. மரணவீட்டில் செய்யவேண்டியவற்றை மனமாரசெய்து கடமையில் நிறைவுகண்டார். வகுத்தான் வகுத்தவகை ஒன்றுளதே. யாம் ஒன்றும் அறியோம். 21-5-97 இரவு தனது மாமனாரின் 8ம் செலவில் பங்குகொண்டவர் யாவும் முடிந்தபின் நித்திரைக்குப் புறப்பட்டார். அன்று இரவு வைகாசி விசாக பூரணை. இத்தினத்தில் இரவு 10-45 மணியளவில் மீளாத்துயில் அவரை அரவணைத்துக்கொண்டது.

சிவமயம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருப்பிரமபுரம்

குருவருள்

பண்: நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர் கள்வன்
னேடுடைய மலரான் முனைநாட் பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மானி வன்றன்னைப்
யொருநெறிய மனம்வைத்துணர் ஞானசம்பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்த்தலெளிதாமே

திருநாவுக்கரசு நாயனார்

திருவதிகை வீரட்டானம்

பண்: கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியே
னேற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவனெப் பொழுதுந்
தோற்றாதென் வயிற்றின கம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
வாற்றேனடியேன திகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

போர்த்தாயங்கோ ரானையினீருரிதோல்
புறங்காடரங்கா நடமாடவல்ல
யார்த்தானரக்கனறனை மால்வரைக்கீ
ழடர்த்திட்டருள் செய்தவது கருதாய்
வேர்த்தும்பு ரண்டும் விழுந்து மெழுத்தா
லென்வேதனையான விலக்கியிடா
யார்த்தார் புனல்சூழ திகைக்கெடில
வீராடட்டானத் துறையம்மானே.

சுந்தரமூர்த்தி நாயனார்

திருவெண்ணெய் நல்லூர்

பண்: இந்தளம்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்
டுறையு
ளத்தாவுனக்காளா யினியல்லே னெனலாமே

கார்ஊர் புனலெய்திக் கரைகல்லித் திரைக்கையாற்
பாரூர் புகழெய்திப் திகழ்பன்மா மணியுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால வெண்ணெய் நல்லூரருட்றையு
ளாரூரனெம் பெருமாற்காளல்லே னெனலாமே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருவாலவாய் திருநீற்றுப்பதிகம்

பரையின் வரலாறு

பண்: காந்தாரம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்றிரு வாலவாயான்றிரு நீறே

ஆற்றலடல் விடையேறு மாலவாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
றேற்றித்தென் னனுடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள்பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

நமசிவாயத் திருப்பதிகம்

அஞ்செழுத்துண்மை

பண்: கௌசிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினும் மெய்பொரு ளாவது
நாதனாம நமச்சிவாயவே

நந்திநாம நமச்சிவாய வெனுஞ்
சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன் சொற்
றிந்தையான் மகிழ்ந் தேத்தவல்லா ரெல்லாம்
பந்தபாச மறுக்க வல்லார்களே

திருநாவுக்கரசு நாயனார்

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண்: காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
நற்றுணையாவது நமச்சிவாயவே

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத்
தேத்த வல்லார் தமக்கிடுக்க ணில்லையே,

சுந்தரமூர்த்தி நாயனார்

திருப்பாண்டிக் கொடுமுடி

பண்: பழம்பஞ்சரம்

மற்றுப்பற் றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக் கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே

கோணியபிறை சூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்பானு
லாவரிவண்டறைகொன்றைத்தாரதைப்படப்பாம்பரை,
நாணனைந்
தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்பமே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருஷேத்திரக் கோவை

பண்: இந்தளம்

ஆரூர் தில்லையம்பலம் வல்ல நல்லம்
வடகச்சியு மச்சிறு பாக்க நல்ல
கூரூர்குடவாயில் குடந்தை வெண்ணி
கடல்சூழ் கழிப்பாலை தென்கோடி பீடார்
நீரூர்வயனின் றியூர் குன்றியூருங்
குருகாவையூர் நாரையூர் நீடு கானப்
பேரூர் நன்னீள் வயனெய்த் தானமும்
பிதற்றாய் பிறைசூடிதன் பேரிடமே

அம்மா னையருந் தவமாகி நின்ற
வமரர் பெருமான்ப தியான வுன்னிக்
கொய்ம்மா மலர்ச்சோலை குலாவு கொச்சைக்
கிறைவன் சிவஞான சம்பந்தன் சொன்ன
விம்மாலை யீரைந்துமிகு நிலத்தி
விரவும்ப கலுதினைந் தேத்தி நின்று
விம்மாவெருவா விரும்பும் மடியார்
விதியார் பிரியார் சிவன்சேவடிக்கே

திருநாவுக்கரசு நாயனார்

பண்: திருத்தாண்டகம்

தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
சொல்லிக் குளிரறைப் பள்ளிகோவல்
வீரட்டங் கோகரணங் கோடிகாவு
முல்லைப் புறவ முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்திமுற்றங்
கல்லிற்றிகழ் சீரார்காளத்திபுங்
கயிலாய நாதனையே காணலாமே.

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவல மாற்பேறு வாய்மூர்வைகல்
வலஞ்சுழி வாஞ்சிய மருகல் வன்னி
நிலமலி நெய்த்தானத் தோடெத்தானத்து
நிலவு பெருங்கோயில் பலகண்டாற் றொண்டீர்
கலிவலி மிக்கோனைக் கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காணலாமே.

சுந்தரமூர்த்தி நாயனார்

ஊர்த்தொகை

பண்: பழம்பஞ்சுரம்

காட்டூர்க்கடலே கடம்பூர்மலையே கானப் பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தே யழுந்தூரரசே! கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங் காட்டூரானே
மாட்டூரறவா மறவா துன்னைப் பாடப்பணியாயே.

கைம்மாவுரி வையம்மான் காக்கும் பலவூர் கருத்துன்னி
கைம்மாந் தடங்கண் மதுரமன்ன மொழியாண் மடச்சிங்கடி
தம்மானூரான் சடையன் சிறுவனடியன் றமிழ்மாலை
செம்மாந்திருந்து திருவாய் திறப்பார் சிவலோகத்தாரே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருவெழுகூற்றிருக்கை

சிவனுருவம்

ஒருருவாயினைமானாங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல்பூதல
மொன்றியவிரிசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
யிருவரோடொருவனாகிநின்றனை
யோரானீழலொண்கழலிரண்டு
முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றாகக்கோட்டினை
யிருநதியரவமோடொருமதிசூடினை
யொருதாளீரயின்மூவிலைச்சூல
நாற்கான்மான்மறியைந்தலையரவ
மேந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரிமீடழித்துரித்தனை
யொருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவுணரையறுத்தனை
யைம்புலனாலாமந்தக்கரண
முக்குணமிருவளியொருங்கியவானோ
ரேத்தநின்றனையொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
யமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரம்பேணினை
யறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
யிகலியமைந்துணர்புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனைதொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமெள்ளுணர்சிரபுரத்துறைந்தனை

யொருமலையெடுத்த விருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினைபுறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோனான்முகனறியாப்
பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை
யையுறுமமணரு மறுவகைத்தேரரு
மூழியுமுணராக்காழி யமர்ந்தனை
யெச்சனேழிசையோன்கொச்சையைமெச்சினை
யாறுப தமுமைந்தமர்கல்வியு
மறைமுதனான்கு
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
பிருமையினொருமையுமொருமையின்பெருமையு
மறுவிலாமறையோர்
கழுமலமுதுபதிக்கவுணியற்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியு
மனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருக்கடவூர்மயானம்

சிவனுருவம்

பண்: காந்தாரம்

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணங்கி
யெரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே,

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
அரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே

திருநாவுக்கரசு நாயனார்

கோயிற்றிருவிருத்தம்

சிவனுருவம்

பண்: கொல்லி

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைத்தன்னு
ளாளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்ப
தென்னே

தருக்குமிகுத்துத்தன்றோள்வலியுன்னிடத்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோள்சிரித்து
வரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவ
னெருக்குமிதித்தவிரல்கண்கொண்டுகாண்பதென்னே

திருநாவுக்கரசு நாயனார்

திருப்பூவணம்

திருத்தாண்டகம்

சிவனுருவம்

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்று
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனி பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்று
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே

சுந்தரமூர்த்தி நாயனார்

திருக்கடவூர் மயானம்

சிவனுருவம்

பண்: பழம்பஞ்சரம்

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருவாழ்கொளிபுத்தூர்

பண்: தக்காரம் திருவடிகள்

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றானடிகாண்போம்.

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே

திருநாவுக்கரசு நாயனார்

திருவதிகைவீரட்டானம்

திருவடித்திருத்தாண்டகம்

அரவணையான் சிந்தித்தரற்றும்மடி
யருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாரும்மடி
சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணாமடி
பரவுவார்பாவம்பறைக்கும்மடி
பதினெண்கணங்களும்பாடும்மடி
விரவுநீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி

அந்தாமரைப்போதலர்ந்தவடி
யரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடி
முழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள்பாகன்னடி
பவளத்தடவரையேபோல்வானடி
வெந்தார்சுடலைநீறாடும்மடி
வீரட்டங்காதல்விமலன்னடி

சுந்தரமூர்த்தி நாயனார்

திருப்புன்கூர்

திருவடிகள்

பண் தக்கேசி

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
வவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வண்மைகண்டடியே
னெந்தைநீயெனைநமன்றமர்நலியி
லிவன் மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே

கம்பமால்களிற்றன்னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவரருவினையிலரே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருப்பூந்தராய்

அருச்சனை

பண்: காந்தாரபஞ்சமம்

பந்துசேர்விரலாள்பவளத்துவர்வாயினாள் பனிமாமதி
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிப்பிரான் (போன்முகத்
வந்துசேர்விடம்வானவரெத்திசையுற்றிறைந்துவலஞ்செய்துமாமல
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே

தேம்பனுண்ணிடையாள்செழுந்சேலனகண்ணியோடண்ணல்
[சேர்விடந்தேனமர்
பூம்பொழிறிகழ்பொற்பதிபூந்தராய்போற்றதுமென்
றோம்புதன்மையன்முத்தமிழ்நான்மறைஞானசம்பந்தனொண்
டமிழ்மாலைகொண்
டாம்படியிவையேத்தவல்லார்க்கடையாவினையே.

திருநாவுக்கரசு நாயனார்

ஸ்ரீகயிலாயம்

திருத்தாண்டகம்

அருச்சனை

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி
மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி
யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி
யோவாதசத்தத்தொலியேபோற்றி
யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி
யாறங்கநால்வேதமானாய்போற்றி
காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி
யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி
யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி
யிறவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி
பட்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி

சுந்தரமூர்த்தி நாயனார்

திருக்கழுக்குன்றம்

பண்: நட்டபாடை

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளுரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

கோளறு திருப்பதிகம்

பண்; பியந்தைக்காந்தாரம்

அடிமை

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனான்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழன்வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்து
ப்றையானஞானமுனிவன்
றானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
யானசொன்மாலையோதுமடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே

திருநாவுக்கரசு நாயனார்

திருவாரூர்த் திருவிருத்தம்

பண்: கொல்லி **அடிமை**

குலம்பலம் பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமுலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளாணிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே

சுந்தரமூர்த்தி நாயனார்

திருத்தொண்டர்தொகை

பண்: கொல்லி

அடிமை

தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியே
னில்லையேயென்னாதவியற்பகைக்குமடியே
னிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டற்கடியே
னல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்
வரிவளையாண்மானிக்குநேசனுக்குமடியேன்
றென்னவனாயுலகாண்டசெங்கணார்கடியேன்
றிருநீலகண்டத்துப்பாணர்கடியே
னென்னவனாமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோ
னன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

ஔவையார் அருளிச் செய்த

நல்வழி

காப்பு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் — எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்யென் றிராதே — இடுங்கடுக
உண்டாயி னுண்டாகு மூழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லாற் — கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகுமவர்க்கு. 4

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா — இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தா நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில் — வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னாலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 6

எல்லாப் படியாலு மெண்ணினா லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை — நல்லார்
அறிந்திருப்பா ராதலினா லாங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. 7

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் — தேட்டம்
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம். 8

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 9

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் — வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 10

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் — ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைக்கூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 11

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 12

ஆவாரை யாரே யழிப்பா ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் — ஓவாமல்
ஐயம் புகுவர்ரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். 13

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும். 4

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை — உபாயம்
இதுவே மதியாகு மல்லதா வெல்லாம்
விதியே மதியாய் விடும். 15

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற் — பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே யறி. 16

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம் — வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். 17

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகின்
உற்றா ருகந்தா ரெனவேண்டா — மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம். 18

சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும் — போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்.

அம்மி துணையாக வாறிழிந்த வாறொக்கும்
கொம்பை முலைபகர்வார்க் கொண்டாட்டம் — இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும். 20

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். 21

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 22

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. 54

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் — மாறில்
உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை. 24

ஆன முதலி லதிகஞ் செலவானான்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானா நாடு. 25

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடகை
தானந் தவமுயற்சி தாளான்மை — தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்.
பசிவந் திடப்பறந்து போம். 26

ஒன்றை நினைக்கி னது வொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவானும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல் 27

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான். 28

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை — சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். 29

தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே — வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றா
வெறுத்தாலும் போமோ வீதி. 30

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சாலும்
ஒழுக்க முயர்குலத்தி னன்று — வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ் சாத்
தாரத்தி னன்று தனி. 31

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர் — சோறிடுந்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து. 32

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தி
வேருக்கு நெக்கு விடும். 33

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றாங் கெதிர்கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 34

பூவாதே காய்க்கும் மரமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே — தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. 35

நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்திற்
கொண்ட கருவழிக்குங் கொள்கைபோல் — ஒண்டொடீ
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம்.

வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை — நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்
விண்ணுறுவார்க் கில்லை விதி. 37

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே — நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள். 38

முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானாயிற் — செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு. 39

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவர் சகமென் றுணர். 40

உ

சிவமயம்

பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

பிடியதனுரு வுமை கொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருவாசகம்

தந்த துன் றன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யர்னிதற் கிலனோர் கைம்மாறே.

திருவிசைப்பா

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
மூகத்தலை யகர்த்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்ன காபரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்
ஆலயம் பாகின னையசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடுமடியவ ரெல்லாஞ்
சிவபதம் குறுகி நின்றாரே.

திருப்பல்லாண்டு

ருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ரும்பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ருமுலகுங் கழறவுழறியுமை மணவாளனுக்காட்
ரும் விசும்புமறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

புராணம்

ஐந்துபேரறிவும்கண்களேகொள்ள
வளப்பெரும்கரணங்கள்நான்குஞ்
சிந்தையேயாகக்குணமொருமூன்றுஞ்
திருந்துசாத்விகமேயாக
விந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையில்
தனிப்பெரும்கூத்தின்
வந்தபேரின்பவெள்ளத்துட்திளைத்து
மாறிலாமகிழ்ச்சியில்மலர்ந்தார்.

இறவாமற்பிறவாமலெனையாள்சற்குருவாகித்
பிறவாகித்திரமானபெருவாழ்வைத்தருவாயே
குறமாதைப்புணர்வோனேகுகனேசற்குமரேசா
கறையானைக்கிளையோனேகதிர்காமப்பெருமாளே.



பதிப்புரை

இப்பூவுலக வாழ்வை விட்டு தேகவியோகம் எய்தியோர் நினைவாக நினைவு மலர் அச்சிட்டு வெளியிடுவது இன்றைய காலகட்டத்தில் வழக்கமாக வந்துவிட்டது. இதற்காகக் கணிசமான பணமும் செலவிடப்படுகின்றது. எனவே அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய, ஆக்கபூர்வமான சிந்தனைகளை வளர்க்கக் கூடிய, விடையங்களையும் வாழ்க்கைக் குறிப்போடும், வம்சாவழி முதலியவற்றோடும் சேர்த்துக் கொள்ளல் கூடிய பயனைச் சமூகத்திற்கு தரவல்லன.

இந் நோக்கில், அகத்தியர் தேவாரத்திரட்டில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரச, சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரின் இருபத்தைந்து பதிகங்களின் ஒவ்வொரு பதிகத்தின் முதற் பாடலும் இறுதிப் பாடலும் இங்கே தரப்படுகின்றது.

தேவாரங்கள் தமிழ் வேதம். நம்பியாண்டார் நம்பி வகுத்தவை ஏழு திருமுறைகள். இவை அடங்கன் முறை எனப்படும்.

சிவாலயமுனிவர் கல்வி அறிவு ஒழுக்கத்தாற் சிறந்து விளங்கியவர். சிரத்தையோடு அடங்கன் முறையை பாராயணம் செய்ய ஆசை கொண்டார். இதனை நிறைவேற்ற முடியாமையால் மனம் வருந்தி சிதம்பரத்தில் கனகசபையின் கண். வீற்றிருக்கும் தில்லை நடராசரை வணங்கி தம்கருத்து முற்றும் பொருட்டு அரும் தவம்செய்தார். அப்போது பொதியமலையில் வீற்றிருக்கும் அகத்திய முனிவரை வினவும்படி அகக்காட்சியில் திருவருள் காட்டியது.

சிவாலய முனிவரும் மனம் மகிழ்ந்து அகத்திய முனிவரை காண வேண்டி பொதிய மலை சென்று மூன்று ஆண்டுகள் தவமிருந்தார். தவத்தின் பயனாக அகத்திய முனிவர் காட்சி கொடுத்தார். சிவாலயமுனிவரும் தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்த அகத்திய முனிவர் அவருக்கு அடங்கன் முறை முழுவதையும் உபதேசம் செய்து அதிலிருந்து இருபத்தைந்து பதிகங்களை எடுத்துத் திரட்டி ''இவைகளை நாள் தோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன் முறை முழுவதையும் பாராயணம் செய்த பயனைப் பெறுவார்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினார். சிவாலய முனிவர் அவ்விருபத்தைந்து பதிகங்களையும் பாராயணம் செய்து அவை உலகின் .என்றும் நின்று நிலவ வழிசெய்து திருவட்பேறடைந்தார்.

உ

நன்றி நவிலல்

எமது குலவிளக்காய் ஒளி வீசிக்கொண்டிருந்து
17-05-1997 சனிக்கிழமை
தேகவியோகம் எய்திய
திரு. முத்துச்சாமி தங்கராசா
அவர்களதும்
21-05-1997 புதன்கிழமை
தேகவியோகம் எய்திய
திருமதி கவீந்திரதாஸ் மாலினி
அவர்களதும்
மரணச் சடங்குகளில் கலந்து பல வழிகளிலும் எமது பிரிவுத்துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும், 19-06-97 வியாழக்கிழமையும், 20-06-97 வெள்ளிக் கிழமையும் நடைபெற்ற இருவரினதும் அந்தி யேட்டி, வீட்டுக்கிரியைகளில் பங்குபற்றியும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மதியபோசனத்திலும் பங்குபற்றி ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அச்சுவேலி.
17-06-97.

குடும்பத்தினர்

ஏழாலை மகாத்மா அச்சகம், கந்தர்மடம்.